

சென்னை வடக்கு மாவட்டம் ராயபுரம் அறிவகத்தில் கழக குடும்பங்களுக்கு புத்தாடைகள் பொங்கல் பொருள்களை தலைமை செயற்குழு உறுப்பினர் தா. இளைய அருணா ஏற்பாட்டில் கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, இந்து சமய அறநிலை துறை அமைச்சர் பி.கே.சேகர் பாபு மாவட்டப் பொறுப்பாளர் ஆர்.டி. சேகர் எம்.எல்.ஏ. நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி வீராசாமி ஆகியோர் வழங்கினார்கள். இதில் ஐட்ரீம் மூர்த்தி எம்.எல்.ஏ., ஜே.ஜே.எபினேசர் எம்.எல்.ஏ. உள்ளிட்ட கழக நிர்வாகிகள் பங்கேற்றனர்.

### அரிசி குடும்ப அட்டைதாரர்கள் – முகாம்வாழ் இலங்கைத் தமிழர் குடும்பங்களுக்கு 11.1.2026 வரை

# 1,86 கோடி குடும்பங்களுக்கு பொங்கல் பரிசுத் தொகுப்பு வழங்கப்பட்டுள்ளது!

## கூட்டுறவுத்துறை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் தகவல்!

**சென்னை, ஜன.12–**

**அரிசி குடும்ப அட்டைதாரர்கள் மற்றும் முகாம்வாழ் இலங்கை தமிழர்கள் குடும்பங்களுக்கு 11.1.2026 அன்று வரை 24,924 நியாய விலை கடைகளில் உள்ள 1,86,23,426 குடும்ப அட்டைதாரர்களுக்கு பொங்கல் ரொக்கத் தொகை ரூ. 5587.02 கோடி விநியோகம் செய்யப்பட்டுள்ளது எனவும், 1,39,06,292 வேட்டி, சேலைகளும் வழங்கப்பட்டுள்ளது எனவும் கூட்டுறவுத்துறை அமைச்சர் கேஆர். பெரியகருப்பன் தெரிவித்துள்ளார்.**

அவர் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

தமிழர் திருநாளாம் தைப் பொங்கல் 2026 திருநாளை மக்கள் அனைவரும் சிறப்பாகக் கொண்டாடும் வகையில், தமிழ்நாடு அரசு 2,22,91,710 எண்ணிக்கையிலான அனைத்து அரிசி குடும்ப அட்டைதாரர்கள் மற்றும் இலங்கைத் தமிழர் மறுவாழ்வு முகாம்களில் வசிக்கும் குடும்பங்களுக்கும் பொங்கல் பரிசுத் தொகுப்பாக ஒரு கிலோ பச்சரிசி, ஒரு கிலோ சர்க்கரை மற்றும் ஒரு முழு நீளக்கரும்பு வழங்கப்படும் எனவும், பொங்கல் திருநாளை மேலும் சிறப்பாக கொண்டாட அனைத்து அரிசி குடும்ப அட்டைதாரர்கள் மற்றும் இலங்கைத் தமிழர் மறுவாழ்வு முகாம்களில் வசிக்கும் குடும்பங்களுக்கும் ரொக்கப் பரிசாக ரூ.3,000/ வழங்கப்படும்" எனவும் முதலமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் 8.1.2026 சென்னை, பட்ரோடு நியாய விலைக் கடையில் அரிசி குடும்ப அட்டைதாரர்களுக்கு பொங்கல்




பரிசுத் தொகுப்பினையும், வேட்டி, சேலைகளையும் வழங்கி, தொடங்கி வைத்தார். மேலும், துணை முதலமைச்சர் அவர்கள் சென்னை, சிந்தாதரிப்பேட்டை TUCS நியாயவிலைகடையிலும், அந்தந்த மாவட்டத்தில் அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள் மூலமாக இத்திட்டம் தொடங்கி வைக்கப்பட்டது.

தமிழ்நாடு முழுவதும் அனைத்து அரிசி குடும்ப அட்டைதாரர்கள் மற்றும் இலங்கை தமிழர் மறுவாழ்வு முகாம்களில் வசிக்கும் குடும்பத்தினர் ஆகியோர்களுக்கு 2026 பொங்கல் பரிசுத் தொகுப்பிற்கான டோக்கன்கள் குடும்ப அட்டைதாரர்களுக்கு 04.01.2026 முதல் 07.01.2026 வரை தொடர்புடைய நியாயவிலைக்கடைப் பணியாளர்களால் வழங்கப்பட்டன. இதில், முதல் நாள் 200 குடும்ப அட்டைத்தாரர்களும், இரண்டாம் நாள் 300 முதல் 400 வரையிலான குடும்ப அட்டைதாரர்கள் பொங்கல் பரிசுத் தொகுப்பு பெறுவதற்கு ஏதுவாக தொடர்புடைய நியாய விலைக்கடைப் பணியாளர்களால் டோக்கன்கள் விநியோகம் செய்யப்பட்டது. இதற்காக சுமார் 50,000 கூட்டுறவுத்துறை பணியாளர்கள் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். பொங்கல் பண்டிகைக்கு முன்னதாக அனைத்து அரிசி பெறும் குடும்ப அட்டைதாரர்களுக்கும் பொங்கல் பரிசு வழங்கும் வகையில் பணிகள் நடைபெற்று வருகிறது. இந்த டிஜிட்டல் மயமான காலகட்டத்தில் அனைவருக்கும் பொங்கல் பரிசு தொகை ரொக்கமாக வழங்கிட கூட்டுறவுத் துறையின் சிறப்பான திட்டமிடல் மற்றும் தொய்வில்லாமலும், விரைவாக குறைந்த காலத்தில் வழங்கப்பட்டுள்ளது. இந்த நடைமுறை பிற தேசிய வங்கிகள் செய்ய முடியாததை, கூட்டுறவு வங்கி திறம்பட செய்து சாதித்துள்ளது.

11.1.2026 அன்று வரை 24,924 நியாயவிலை கடைகளில் உள்ள 1,86,23,426 குடும்ப அட்டைதாரர்களுக்கு பொங்கல் ரொக்கத் தொகை ரூ.5587.02 கோடி விநியோகம் செய்யப்பட்டுள்ளது எனவும், 1,39,06,292 வேட்டி, சேலைகளும் வழங்கப்பட்டுள்ளது.

இவ்வாறு கூட்டுறவுத் துறை அமைச்சர் கேஆர். பெரிய கருப்பன் தெரிவித்துள்ளார்.

# மிரட்டல்!



**"தன் வசமுள்ள விசாரணை அமைப்புகளைக் காட்டி**
**கட்சிகள் மற்றும்**
**அதன் தலைவர்கள்**
**தொண்டர்களின்**
**விருப்பங்களுக்கு**
**மாறான கூட்டணி!**
**முடிவெடுக்க மிரட்டும்**
**அரசியலை நாட்டின்**
**உள்துறை அமைச்சர்**
**தமிழ்நாட்டில் முகாமிட்டு**
**மேற்கொண்டு வருவதை**
**மக்கள் கவனிக்கிறார்கள்...**



**மருது அழகுராஜ்**
கழக செய்தித் தொடர்புக் குழு
துணைத் தலைவர்

### ஒன்றியப் பெருந்தலைவர் எஸ்.ஆர்.எல்.இதயவர்மன் ஏற்பாட்டில்

# திருப்போரூர் வடக்கு - தெற்கு - பேரூர்க் கழகம் சார்பில் பொங்கல் தொகுப்பு!

## மாவட்டச் செயலாளர் - அமைச்சர் தா.மோ.அன்பரசன் வழங்குகிறார்!

காஞ்சிபுரம், ஜன. 12

தை பொங்கல் திருநாளை முன்னிட்டு காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம், திருப்போரூர் வடக்கு மற்றும் தெற்கு மற்றும் பேரூர் கழக நிர்வாகிகளுக்கு பொங்கல் தொகுப்பு வழங்கும் விழா இன்று (12.01.2026 திங்கட்கிழமை) காலை 11 மணிக்கு, திருப்போரூர், காளவாக்கம் பகுதியில் உள்ள கணேஷ் மஹால் திருமண மண்டபத்தில் திருப்போரூர் ஒன்றிய பெருந்தலைவர், வடக்கு ஒன்றியக் கழகச் செயலாளர், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.ஆர். எல்.இதயவர்மன் ஏற்பாட்டில் நடைபெறுகிறது.

இவ்விழாவில் காஞ்சிபுரம் வடக்கு மாவட்டக் கழகச் செயலாளரும், குறு, சிறு, நடுத்தர தொழில் நிறுவ னங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் கலந்து கொண்டு கழக நிர்வாகிகள் பொங்கல் தொகுப்புகளை வழங்கி சிறப்பிக்கிறார்.

இந்நிகழ்ச்சியில் தெற்கு ஒன்றியக் கழகச் செயலாளர் பையனூர் எம்.சேகர், பேரூர் கழகச் செயலாளரும் பேரூராட்சி தலைவருமான மு. தேவராஜ் மற்றும் மாவட்ட, ஒன்றிய, பேரூர், கிளை மற்றும் அனைத்து அணிகளை சேர்ந்த நிர்வாகிகள் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர்.

இவ்வாறு திருப்போரூர் வடக்கு ஒன்றியக் கழகச் செயலாளர், ஒன்றியப் பெருந்தலைவர் எஸ்.ஆர். எல்.இதயவர்மன் தெரிவித்துள்ளார்.




பல்லாவரம் வடக்கு பகுதி கழக விளையாட்டு அணி இளைஞரணி மாணவரணி சார்பில் திராவிட பொங்கல் விழாவை முன்னிட்டு பகுதி கழகச் செயலாளர் மண்டலத் தலைவர் இ. ஜோசப் அண்ணாதுரை ஏற்பாட்டில் மாபெரும் கால்பந்தாட்ட போட்டியில் மாவட்ட கழகத் துணைச் செயலாளர் பல்லாவரம் இ. கருணாநிதி எம்எல்ஏ கலந்து கொண்டு இறுதிப் போட்டியை தொடங்கி வைத்து தொடர்ந்து வெற்றி பெற்ற அணிகளின் வீரர்களுக்கு முதல் பரிசு கோப்பை மற்றும் 25 ஆயிரம் ரூபாய் இரண்டாம் பரிசு கோப்பை மற்றும் 15 ஆயிரம் மூன்றாம் பரிசு கோப்பை மற்றும் 10 ஆயிரம் ரூபாய் என வழங்கி வீரர்கள் கௌரவிக்கப்பட்டார்கள். மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் கோ. ஜானகிராமன் பகுதி கழக நிர்வாகிகள் வ.முத்து, எஸ்.நெடுஞ்செழியன் எம்.சி., எம். இளங்கோ, வட்டக் கழக செயலாளர்கள் டி.வி.ராஜா எம்.சி., மை. அந்தோணி, பி.பரமசிவம், டி.எச். பிரான்சிஸ் பால், பகுதி அணிகளின் அமைப்பாளர்கள் அய்யாக்கண்ணு சரத் வெங்கடேஷ் கேசவன் மற்றும் பலர் உடன் இருந்தனர்.

# எங்க கனவ சொல்லுறோம்!



**வா**ய் நிறையும் புன்னகை
வயிறு நிறையும் காலை உணவு
அறிவு நிறையும் நூலகங்கள்
கல்வி நிறையும் புதுமைப் பெண்
வாழ்க்கை நிறையும்
உரிமைத் தொகை
சந்தோஷம் நிறையும் விடியல் பயணம்


வெற்றி நிறையும்
நான் முதல்வன்

ஆரோக்யம் நிறையும் கலைஞர்
நூற்றாண்டு மருத்துவமனை

மனசு நிறையும் கோயில்கள்

இத்தனையும் தருகின்ற
திராவிட மாடல் முதல்வர் ஆட்சிதான்
மீண்டும் வேண்டும்
எப்போதும் வேண்டும்
இன்னும் பல
நூறாண்டுக்கும்
வேண்டும்!

**கவிஞர்**
**ஆண்டாள்**
**பிரியதர்ஷினி**



### அயலகத் தமிழர் தின நிறைவு விழா:

# நந்தம்பாக்கம் வர்த்தக மையத்திற்கு வருகை தரும் முதல்வருக்கு உற்சாக வரவேற்பு!

## ஆலந்தூர் தெற்குப் பகுதிச் செயலாளர் என், சந்திரன் எம்,சி, வேண்டுகோள்!

சென்னை, ஜன.12

ஆலந்தூர் தெற்கு பகுதி செயலாளர் மண்டல குழு தலைவர் என். சந்திரன் வேண்டுகோள் வருமாறு:

நந்தபாக்கம் சென்னை வர்த்தக மையத்தில் இன்று அயலக தமிழர் தின நிறைவு விழாவில் கலந்து கொண்டு சிறப்பிக்க வருகை தரும் கழக தலைவர் முதலமைச்சர், மு.க.ஸ்டாலின் அவர்களை வரவேற்கும் விதமாக இன்று 12.01.2026 காலை 9:30 மணியளவில் சென்னை வர்த்தக மையம் நுழைவு வளாகத்தில் காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட செயலாளரும், சிறு குறு மற்றும் நடுத்தர தொழில் துறை அமைச்சர்

தா.மோ.அன்பரசன் தலைமையில் சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட இருக்கிறது.

எனவே ஆலந்தூர் தெற்கு பகுதிகுட்பட்ட பொதுக்குழு உறுப்பினர்,மாவட்ட அணிகளின் நிர்வாகிகள், பகுதி நிர்வாகிகள், வட்ட கழக செயலாளர்கள், மாவட்ட பிரதிநிதிகள், மாமன்ற உறுப்பினர்கள்,வட்ட நிர்வாகிகள், பகுதிவட்ட அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், இளைஞரணியினர், மகளிரணியினர்,பாக முகவர்கள் (BLA2), கழக தோழர்கள், கட்டாயம் இருவர்ண கழக கொடியுடன் தவறாமல் கலந்து கொண்டு சிறப்பான வரவேற்பு வழங்குமாறு கேட்டு கொள்கிறேன்.

இவ்வாறு ஆலந்தூர் தெற்கு பகுதி செயலாளர் மண்டல குழு தலைவர் என். சந்திரன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

# தருமபுரியில் 'உங்க கனவு சொல்லுங்க' நிகழ்ச்சி!

தருமபுரி, ஜன. 12 –

தருமபுரி அரசு கலைக்கல்லூரி கலையரங்கத்தில்"உங்ககனவசொல்லுங்க " திட்ட துவக்க விழா நிகழ்ச்சி காணொலி காட்சி வாயிலாக ஒளிபரப்பபட்டது.

இந்நிகழ்வில்தருமபுரிமாவட்டஆட்சித்தலைவர்ரெ.சதீஸ்மற்றும்தருமபுரி கிழக்கு மாவட்ட பொறுப்பாளர் வழக்கறிஞர்.ஆ.மணி எம்.பி. ஆகியோர் கலந்து கொண்டு, இத்திட்டத்தில் பங்கேற்றுள்ள தன்னார்வலர்களுக்கு தொப்பி மற்றும் கைபேசி இணைப்புகளை வழங்கினர்.

உடன்தருமபுரிநகரமன்றதலைவர் லட்சுமி மாது, மாவட்ட வருவாய் அலுவலர் கவிதா,வருவாய் கோட்டாட்சியர் காயத்ரி,நகர செயலாளர் எம்.பி. கௌதம்மற்றும்மகளிர்சுயஉதவிகுழுவினர் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



சென்னை மேற்கு மாவட்டம், அண்ணாநகர் வடக்குப் பகுதி, 101 வது வட்டத்தில் திராவிடப் பொங்கல் விழா முன்னிட்டு மாவட்டக் கழகச் செயலாளர் நே.சிற்றரசு ஆலோசனைப்படி, அண்ணாநகர் சட்டமன்ற உறுப்பினர் எம்.கே.மோகன், மாநில தகவல் தொழில்நுட்ப அணி துணைச் செயலாளர் கார்த்திக் மோகன் ஆகியோர் பொங்கல் பரிசு தொகுப்பினை பொதுமக்களுக்கு வழங்கினர். இதில் பகுதிக் கழகச் செயலாளர் ச.பரமசிவம், 101 வது வட்டக் கழகச் செயலாளர் க.கோவிந்தராஜ், மாமன்ற உறுப்பினர் மெட்டில்டா கோவிந்தராஜ், 101 (அ) வட்டச் செயலாளர் சி.பி.திருமலை மற்றும் கழக நிர்வாகிகள் பலர் உள்ளனர்.